**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No: 61/2021** **நாள் 17.04.2026**

**வாசா.1, திரு.முத்தீஸ்வரன்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 முதல் 3 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.3 முதல் வாசாஆ.9 வரையிலான ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களுக்கு நான்குபக்க எல்லைமால்கள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.10 ஆவணத்தில் சர்வேஎண்.963 ல் ஏக்கர் 19 சென்ட் 42 ல் பிரிவின்றி ஏக்கர் 1 சென்ட் 82 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரிதான். வாசாஆ.10 ஆவணத்தை உலகம்மாள் என்பவர் காளிச்சாமி மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோர்களுக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் தான செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். வாசாஆ.10 ஆவணத்தில் கண்ட மேற்படி பிரிவின்றி 1 ஏக்கர் சென்ட் 82 க்கு நான்குபக்க மால்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மால்கள் எதன் அடிப்படையில் சொல்லப்பட்டுள்ளது என்று கேட்டால் சர்வே எண்.963 க்கு நான்குபக்க மால்கள் என்னவாக உள்ளதோ அந்த மால்களை தான் மேற்படி வாசாஆ.10 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. வாசாஆ.10 ஆவணத்தில் சர்வே எண்.963 போக வேறு சொத்துக்களும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.11 ஆவணமானது சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ.11 ஆவணமானது சர்வே எண்.963 க்கு பட்டா எண் .1653 க்கு உரியதாகும். வாசாஆ.11 ஆவணமானது தீர்வை ரசீதுகள் என்றால் சரிதான் அதில் பட்டா எண் போடப்பட்டுள்ளது. மேற்படி பட்டா எண்.1653 க்குரிய பட்டாவினை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஜெராக்ஸ் ஆவணமாக இருந்ததால் தாக்கல் செய்யவில்லை. உலகம்மாள் பெயரிலான தனி பட்டாவினை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஜெராக்ஸ் ஆவணமாக இருந்ததால் தாக்கல் செய்யவில்லை. உலகம்மாள் வாங்கப்பட்டதாக சொல்லும் சொத்துக்கள் அனைத்தும் பிரிவினையில்லாத பாகமாக வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். உலகம்மாள் பிரிவினையில்லாத பாகமாக வாங்கியதாக சொல்லப்படும் சொத்துக்களை பொறுத்து உலகம்மாள் பாக வழக்கை ஏதேனும் தாக்கல் செய்திருந்தாரா என்று கேட்டால் அனைவருமாக மொத்தமாக கூட்டாக அனுபவித்து வந்ததால் தான் அவர் பாக வழக்கு எதையும் தாக்கல் செய்யவில்லை. கூட்டாக நாங்கள் அனுபவித்து வந்தோம் என்பதை காண்பிக்ககூடிய பட்டா போன்ற ஆவணங்களை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று கேட்டால் கூட்டு பட்டாவுடைய ஜெராக்ஸ் ஆவணம் இருந்ததால் தான் அதனை நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் எங்களுக்கு எந்த பட்டா படி பாத்தியப்பட்டுள்ளது என்று நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டு சொல்லவில்லை ஆனால் ரசீதில் பட்டா எண் உள்ளது. நாங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் 1 வது தபசில் 1 அயிட்ட சொத்தில் பிரிவினையின்றி 40 சென்டும் , 2 வது அயிட்ட சொத்தில் பிரிவினையின்றி 81 சென்டும், அதே சொத்து விபரத்தில் 2 வது தபசில் சொத்தாக பிரிவினையின்றி 61 சென்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 சொத்துக்களும் எந்த பக்கம் உள்ளது என்றும் அதற்குரிய 4 பக்க மால்களும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.10 படி காளிச்சாமி,

மற்றும் 1ம்வாதி பன்னீர் செல்வம் ஆகியோர்கள் தங்கள் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யவில்லை என்று சொன்னால் என் அப்பா காளிச்சாமி பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் ஆகியுள்ளது. மேற்படி என் அப்பா காளிச்சாமி பெயருக்கு எதன் அடிப்படையில் பட்டா மாறியது என்றும், அந்த பட்டா பற்றி விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றும் அந்த பட்டாவையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நல்லதம்பி தேவருக்கு சுந்தரராஜ், சுப்பிரமணிய தேவர் , கருப்பனதேவர், கிருஷ்ணசாமி, பாண்டி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். சுப்பிரமணிய தேவரின் வாரிசுகள் தான் இவ்வழக்கின் 1, 2 எதிர்வாதிகளான கிருஷ்ணம்மாள், சுந்தரமூர்த்தி என்றால் சரிதான். மேற்படி நல்லதம்பி தேவரின் வாரிசுகளில் சுப்பிரமணிய தேவர் வாரிசு தவிர மற்றவர்கள் வாரிசு இல்லாமல் இறந்துபோய்விட்டார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.963 ல் நல்லதம்பி தேவருக்கு ஒதுக்கப்பட்ட 60 சென்ட் நிலத்தினை அவரது மகனான சுப்பிரமணிய தேவர் அடைந்து அனுபவித்து வந்தார் என்று சொன்னால் அது பொய். பட்டா எண்.1653 ல் சுப்பிரமணிய தேவர் பெயரும் சேர்ந்து கூட்டு பட்டாவாக வழங்கப்பட்டது என்று சொன்னால் அது பொய். சுப்பிரமணிய தேவர் இறந்த பின்பு பட்டா எண்.1653 ல் சர்வே எண்.963 ல் சுப்பிரமணிய தேவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவரது வாரிசுகளான 1, 2 எதிர்வாதிகள் அடைந்து அனுபவித்து வருகின்றார்கள் என்று சொன்னால் அது பொய். அவ்வாறு 1, 2 அனுபவித்து வந்து சர்வே எண்.963 ல் 51 சென்டை வழக்கில் உள்ள 3 ம் எதிர்வாதிக்கு கிரையம் செய்து கொடுத்து அந்த சொத்தானதை 3 ம் எதிர்வாதியானவர் அடைந்து அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் அந்த சொத்தில் சுப்பிரமணிய தேவருக்கு பங்கு எதுவும் இல்லை, அதனால் 1, 2 எதிர்வாதிகளின் அனுபவித்தில் சொத்து இருந்ததில்லை. சர்வே எண்.963 ல் அந்த 51 சென்டானது 3 ம் எதிர்வாதியின் அனுபவித்தில் தற்போது உள்ளது என்றும் மீதம் உள்ள பகுதியான 9 சென்ட் 1, 2 எதிர்வாதிகளின் அனுபவித்தில் உள்ளது என்று சொன்னால் அது பொய். பிராது சொத்தானது எங்களின் அனுபவித்தில் உள்ளது என்பதை காண்பிக்கக்கூடிய எந்த விதமான ஆவணங்களையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நல்லதம்பி தேவருக்கு சர்வேஎண்.940 ல் ஒதுக்கப்பட்டதாக சொல்லப்படும் சொத்தானது பூர்வீக சொத்தானது என்றும் நல்லதம்பி தேவருக்கு 08.01.1930 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மூலமாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நல்லதம்பி தேவருக்கு நாங்கள் சொல்வது போல் பாகத்தில் சர்வே எண்.940 ல் உள்ள சொத்தானதை ஒதுக்கப்படவில்லை என்றும் நல்லதம்பி தேவருக்கு 08.01.1930 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மூலமாக பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நல்லதம்பி தேவருக்கு 08.01.1930 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மூலமாக அவருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் அதனை வாசாஆ.1, வாசாஆ.2 ஆவணம் மூலமாக நல்லதம்பி தேவர் ஒத்தி , கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளார் என்றால் அது தவறு . சர்வே எண்.963 ல் நல்லதம்பி தேவருக்கு 60 சென்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு. பெரியகருப்பன தேவருக்கு 1 ஏக்கர் 21 சென்ட் ஒதுக்கப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. மேற்படி 60 சென்டில் 1, 2 எதிர்வாதிகளால் பிளாட் போடப்பட்டு அவர்கள் அனுபவித்தில் உள்ளது என்று சொன்னால் அது தவறு. என் அப்பா காளிச்சாமி என்பவர் இவ்வழக்கின் 1, 2 எதிர்வாதிகள் மற்றும் பலருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அந்த புகாரின் பெயரிலான முதல் தகவல்

அறிக்கையினை நான் தாக்கல் செய்யவில்லை. புகாரின் பெயரில் முதலில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அந்த புகாரானது பொய் என்று தெரியவந்த பிறகு அந்த முதல் தகவல் அறிக்கையை முடித்துகொண்டார்கள் என்று சொன்னால் போலிசார் முதல் தகவல் அறிக்கையை முடித்துகொண்டார்கள் அதை ஆட்சேபித்து என் அப்பா ஒரு தனிப்பிராதை ஸ்ரீவில்லிபுத்துார் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மேற்படி விபரம் சம்மந்தமாக நான் பிராதில் சொல்லவில்லை என்றும் அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் பிராதில் சொல்லியுள்ளேன் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. 3 ம் எதிர்வாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணமானது சட்டப்படி செல்லத்தக்கது என்று சொன்னால் அது தவறு. பிராது சொத்துக்கள் எங்களது அனுபவித்தில் இருந்ததில்லை என்றும் நாங்கள் தாக்கல் செய்துள்ள வாசாஆ.3 முதல் வாசாஆ.11 வரையிலான ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றும் மேற்படி ஆவணங்கள் நல்லதம்பி தேவரையோ அவரது வாரிசுகளான 1, 2 எதிர்வாதிகளையோ கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அது தவறு.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டி இரு தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 17th day of April 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.